RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s313

OPEN ACCESS

# மணிக்கொடி பி. எஸ். ராமையாவின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்

**து. பால்ராஜ்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி-635001, தமிழ்நாடு, இந்தியா

# Feminist Thoughts in the Works of Manikkodi B.S Ramiah

**D. Palraj** [a, *]

[a] Department of Tamil, Government Arts College for Men, Krishnagiri–635001, Tamil Nadu, India

* Corresponding Author: palrajd1990@gmail.com

Received: 09-04-2021
Revised: 23-04-2022
Accepted: 30-04-2022
Published: 15-07-2022

Check for updates

**ABSTRACT**

Literature is a reflection of human life. Sangam literature embodies all aspects of human life, from contemporary to modern literature. Modern literature such as novels, short stories, poetry, and drama evoke contemporary creators' ideas of family, individual human life, feminism, class, and society through their works. The golden age of short story literature is manikkodi period. Manikkodi magazine started by ku. Srinivasan was transformed into a women's short story magazine run by B.S Ramiah. Innovator, La.Sa.Ra., Va. Ra, Mauni, B.S Ramiah, etc. continued to write short stories in Manikkodi magazine. Bharathiyar, Bharathidasan and Puthumaipittan took feminist ideas with a sense of liberation through their works. Socially concerned B.S Ramiah realistically records the life and social problems of the middle class. The oppression of men on feminist issues, the emancipation of women and the means by which this society can break the restrictions imposed on them and claim their rights. Women become widows at a young age because they get married at a young age. Through his short stories, B.S Ramiah has highlighted the progressive thinking that widows can be remarried at a young age, highlighting the denial of remarriage to widows and the stigma attached to widows by this society.

**Keywords:** Manikkodi, B.S Ramiah, Feminist Thoughts, Widow

## முன்னுரை

விடுதலை காலக்கட்டத்தில் தோன்றிய இதழ்களில் ஒன்று மணிக்கொடி இதழும் ஒன்று. இவ்விதழ் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களான கு. சீனிவாசன், வ. இராமசாமி, டி. எஸ். சொக்கலிங்கம் ஆகியோர்களால் தோற்றுவிக்கப்பட்டது. கு. சீனிவாசன் இதன் தலைமை ஆசிரியராக இருந்து விடுதலை சார்ந்த செய்திகளையும், விடுதலை உணர்வுகளையும் எழுதி வந்தனர். சிறுகதை, கவிதை, விடுதலைப் போராட்ட குரல் என வெளிவந்த இவ்விதழ், பிற்காலத்தில் சிறுகதை இதழாக உருமாற்றம் பெற்றது.

சமூக மாற்றத்திற்குத் துணை நிற்கும் ஊடகங்களில் பத்திரிகைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. பத்திரிகைகளின் வரிசையில் தமிழிலக்கிய வானில் தேசிய வார இதழான மணிக்கொடி விடிவெள்ளியாக முளைத்தெழுந்தது. தமிழில் “தமிழுக்கு இலக்கியத்தில் ருசியும் மதிப்பும் உண்டாக்குவதற்கு ஏற்பட்ட முதல் பத்திரிகை அது” இவ்விதழ் சமூகத்தில் மாறுதல்களை விளைவிக்கின்ற பண்பாட்டு மதிப்புகளைக் கொண்ட சிறுகதைகளை வெளியிட்டு இலக்கிய வேள்வி செய்தது (Ramiah, 2004; Ramiah, 1980). இதன் முதன்மை ஆசிரியர்கு. சீனிவாசன் டெல்லி, இந்தியா

பத்திரிகையில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததும், இவ்விதழைக் கைவிடும் தருவாயில், இதனை பி. எஸ். ராமையாs பொறுப்பேற்று நடத்தி வந்தார். பி. எஸ். ராமையா பொறுப்பேற்றதும் அதிகமான சிறுகதைகள் மணிக்கொடியில் இடம்பெற்றன.

மணிக்கொடி சிறுகதை ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் நாட்டு விடுதலையைத் தம் உயிர்மூச்சாகக் கொண்ட தீவிர தேசியப் பற்றும், சமூக உணர்வும் கொண்டவர்கள். இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் ஒரு பிரிவாகப் பெண் விடுதலையும் வற்புறுத்தப்பட்டது. பாரதியாரைத் தங்களுக்கு முன்னோடியாகக் கொண்ட மணிக்கொடி எழுத்தாளர்கள் பெண்களின் நிலை குறித்தும், அவர்களுக்கான சீர்த்திருத்தங்கள் கொண்ட சிறுகதைகளையும் மணிக்கொடியில் படைத்தனர். வ.ரா., புதுமைப்பித்தன், சிட்டி, சி.சு. செல்லப்பா, பி. எஸ். ராமையா, கு.ப.ரா. ஆகியோர் பெண்ணியம் சார்ந்த கருத்தாங்களைத் தன் படைப்புகளில் எழுதி அதனை மணிக்கொடி மூலம் தமிழ்ச் சமூகத்திற்கு வெளிக்காட்டினர் (Sentamil Selvi, 2001).

## பெண்ணியப் பார்வை

இன்றுவரை இந்த உலகத்தை - மனித வாழ்வை அறிதல் என்கிற செயல்பாடு ஆண்களின் பார்வையில் ஆண்களுக்கான மொழியில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. மனிதவாழ்வு என்னும் இயக்கத்தில் சரிபாதியாகப் பங்கெடுக்கும் பெண்ணின் பார்வையும் அவர்களுக்கான மொழியாடலும் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றன அல்லது உறைந்து போகுமாறு செய்யப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை இன்றைய பெண்ணியச் சிந்தனையாளர்கள் வெளிக்கொண்டு வந்திருக்கின்றனர்.

பழைய வேதகாலத்திலும், பழந்தமிழர் காலத்திலும் உரிமையோடு தன் கடமைகளை ஆற்றிய பெண்கள், உரிமையை இழந்தனர். ஆணாதிக்கம் மேலோங்கி, பெண் சமூகம் அடக்குமுறை செய்யப்பட்டன. தனக்கான எல்லாத் தேவைகளும் ஆண்களே செய்து கொடுத்தனர். குழந்தைத் திருமணம், விதவையர்களின் அவலங்கள், உடன்கட்டை ஏறுதல், தாசியர்நிலை, பலதாரமணம், வரதட்சனைப் போக்கு முதலிய மூடத்தனமான பழக்கவழக்கங்கள் இந்தியர்களிடையே இருந்தன. இதனைக் கலைக்கவே இந்திய தேசிய காங்கிரஸ் (1885), பிரம்மசபை (1828), பிரம்ம சமாஜம் (1845), பிரம்ம ஞான சவை (1875), ஆகிய இயக்கங்கள் தோன்றின. இதன் விளைவாகப் பல புதிய சட்டங்களாகச் சதி தடுப்புச் சட்டம், விதவை மறுமணச் சட்டம் (1856), திருமண உடன்பாடு வயதுச் சட்டம் (இளம் வயது திருமணம் தடுப்பு சட்டம்) (1891) முதலிய சட்டங்கள் தோன்றின (Panjangam, 2019).

இவ்வகையில், இந்த சமுதாயத்தில் இருந்து வந்த குழந்தைத் திருமணம், விதவையர்நிலை, விதவை மறுமணம் ஆகியவற்றை மணிக்கொடி எழுத்தாரான பி. எஸ். ராமையா தன்னுடைய படைப்புகளில் எடுத்துக்காட்டியுள்ளார். விடுதலைப் போராட்டக் களத்தில் தன்னை இணைத்துக் கொண்ட ராமையா, விடுதலை உணர்வோடு, பெண்ணிய விடுதலை உணர்வையும் தன் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை விளக்குவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

## இளம் வயது திருமணம்

உடலும் உள்ளமும் வளராத சிறுவர் சிறுமியராயிருக்கின்ற குழந்தைப் பருவத்தில் நடத்தப்படும் திருமணம் குழந்தைத் திருமணம் ஆகும்.

“பெண்ணிற்குப் பத்து வயதிற்குள் திருமணம் செய்து வைப்பவருக்கு 1972 -ல் கொண்டு வரப்பட்ட சிவில் திருமணச் சட்டத்தின்படி ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.” (Aanaimuthu, 1974).

அதன் பின்னர் 1930 -ல் ஏற்பட்ட சாரதா சட்டமும் குழந்தைத் திருமணத்தைத் தடை செய்கிறது. சட்டத்தை மீறியவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்ட போதிலும் அவ்வழக்கம் சமுதாயத்தில் தொடர்ந்து இடம்பெற்றதைச் சிறுகதைகள் சித்திரிக்கின்றன.

மக்கள் இளம் வயதில் - அதாவது தக்க வயதும், அறிவும், முதிர்ச்சியும், உணர்ச்சியும் இல்லாத காலத்தில் விவாகம் செய்வதால், சமூக வளர்ச்சிக்கும் உரத்திற்கும் கேடாயிருந்து வருகிறது என்ற உண்மையை நமது வாழ்வில் தினமும் அனுபவத்தில் கண்டு வருகிறோம்.

இளம் வயதிலே திருமணம் செய்யப்பட்டு, குறுகிய காலத்திலே கணவனை இழந்து விதவையான இளம் வயது பெண்கள் பலபேர் இந்நாட்டில் தனிமையில் வாழ்ந்து வருகின்றனர். அதனினும் கொடுமை, குழந்தைகளையோடு தனிமையில் வாழ்ந்து வருவதுதான்.

விடுதலைக்கு முந்தியக் காலக்கட்டத்தில் பருவமடைவதற்கு முன்பே பெண்களுக்கு திருமணம் முடித்துவிடுவர். இதற்கு முக்கிய காரணம் ஆண்களுக்கு மட்டுமே இருந்த கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை போன்ற ஆண்களின் அடக்கு முறைகளே. பெண்களுக்கு குழந்தைபெறும் தன்மைப் பருவமடைந்தப் பின்னே நடைபெறும். ஆனால், நம் இந்திய திருநாட்டில் 7 வயதிலே பெண்களுக்கு திருமணம் செய்து கொடுக்கும் வழக்கம் இருந்து வந்தது.

மாதவய்யா பொறுப்பேற்று நடத்திய "தமிழர்நேசன்" என்னும் இதழில் "சம்சார வாழ்க்கையைப் பற்றிப் பேசுமிடத்து ஒரு வயது நிறையாத பெண் சிசுக்களுள் 31 விதவைகளும், ஒன்றுக்கு மேல் இரண்டு வயதுக்குள் 34 விதவைகளும், இரண்டுக்கு மேல் மூன்று வயதுக்குள் 85 விதவைகளும், மூன்றுக்கு மேல் நான்கு வயதுக்குள் 149 விதவைகளும், நாலுக்கு மேல் ஐந்து வயதுக்குள் 385 விதவைகளும் மொத்தம் 15 வயதுக்குள் 23,068 விதவைகளும் 1917 - ஆம் ஆண்டு ஜனசங்கியைப்படி நம்முள் இருக்கின்றனர்" என்று ஒரு புள்ளி விவரத்தைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் (Panjangam, 2019).

கல்யாணம், கணவன், புகுந்த வீடு என எதுவும் அறியாது ஓடி விளையாடும் விளையாட்டுப் பிள்ளைகளாய் 7 வயது பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பதனால் என்ன சுகம் காணமுடியும். ஆனால், ஆண்கள் மட்டும் 15 வயது நிரம்பிய பின்னரே திருமணம் செய்து கொள்வர்.

இதுபோன்ற அவலநிலையை, பி. எஸ். ராமையா தன்னுடைய படைப்புகளில் எடுத்துக்காட்டுகிறார்.

மலரும் மணமும் என்னும் கதையில் வரும் செல்லம் தன்னுடைய தந்தையும், தாயையும் இழந்து அநாதையான பின், தன் தாய் மாமனான லட்சுமணய்யரின் பாதுகாப்பில் வளருகிறாள். அவள் பெற்றோர் இறந்தபோது அவளுடைய வயது ஏழு.

தன் மாமாவின் மகன் ராமதாசு செல்லமுடன் அன்பாகவும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து விளையாடி பழகுவர். எதுக் கொடுத்தாலும் செல்லம் முதலில் ராமதாசுக்கு தான் என்று தியாக செயலில் விட்டுக்கொடுப்பாள். அவனுடைய வயது 12. இந்த பிள்ளைகளின் அன்பைக் கண்ட இவர்களின் பாட்டி சானுபாட்டி இவர்கள் இருவரும் வாழ்க்கையிலும் ஒன்று சேர்ந்து வாழ்ந்தால் நன்றாக இருக்கும் என்று ஆசைப்பட்டாள். ஆனால், செல்லத்தின் மாமா செல்லத்தை வெளியில் கட்டிக்கொடுக்கவே ஏற்பாடு செய்தார்.

"அப்போது செல்லத்திற்கு வயது ஒன்பதாகிக் கொண்டிருந்தது. அவர்களிருந்த கிராமத்திற்கு நாலைந்து மைல் தூரத்திலிருந்த வேறொரு கிராமத்தில் புரோகிதம் செய்து கொண்டிருந்த ஒருவருக்கு அவளை இரண்டாந்தாரமாக கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது" (Ramiah, 2000).

செல்லத்தின் கலியாணம் கூடிய வரையில் சிறப்பாகவே நடந்தது. "கலியாணம் முடிந்து நான்கு வருஷங்களாகியது. அதற்கு பின் அவள் ருதுவான (வயதடைந்த) செய்தியும், அதன் பிறகு ஒரு வாரத்திற்குப் பின் அவள் விதவையான செய்தியும் தெரிந்தது. இவையெல்லாம் என்னாவென்றே அறியாத வயதாகவே அவள் இருந்தாள். பாட்டி பிணாகானம் போட்டு அழுததினால், அவளும் அழுதாள் (Ramiah, 2000).

செல்லத்திற்குத் தன் கணவன் இறந்துவிட்டான், தான் விதவையாகிவிட்டோம் என்பது பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாது. ஆனால், இனி தான் வேறொரு வீட்டிருக்கு போகவேண்டியதில்லை" என்பது மட்டும் அறிந்து கொண்டாள். குழந்தையான செல்லத்திற்கு திருமணம் என்று என்னவென்றே அறியாத வயதில் திருமணம் முடிக்கப்பட்டு, இளம் வயதிலே விதவையான

கொடுமையை பெண்களுக்கெதிரான சமூகக் கொடுமையாகும். இதுபோன்ற கொடுமைகள் சமூகத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாக இருப்பதை ஆசிரியர் இக்கதையின் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

எனது மாஜி கணவர்என்னும் மற்றொருக் கதையில், “சாரதா சட்டத்தின்படி பெண்களின் திருமண வயது 14 என அரசாங்கத்தால் சட்டம் இயற்றப்பட்டாலும், அதை அவர்கள் பொருட்படுத்தாமல் செல்வி சாரதாவிற்கு பதினொன்று முடிந்து பனிரண்டாவது வயது ஆரம்பம் ஆகும்போதே மணம் பார்க்கப்பட்டு கல்யாணம் செய்யப்படுகிறது” (Ramiah, 2000).

கல்யாணம் முடித்துச் சென்ற கணவன் திரும்பவே இல்லை. தனக்கு தேவையான சோப்பு, பவுடர், இன்னும் சில பொருட்களை மட்டும் அனுப்பி வைப்பார். சாந்தி கல்யாணமும் நடக்கவில்லை. மூன்று மாதங்கள் கழித்துத் தன் அப்பாவுக்கு கடிதம் ஒன்று வருகிறது. அதில் அவர்கணவர் அசௌக்கியமாக படுத்திருப்பதாக எழுதியிருந்தது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர்உடல் வலியால் அவதிப்பட்டார். மருத்தவர்கள் பரிசோதனைச் செய்து பார்த்ததில் அவர் ‘பால் மாற்றம் அடைந்து, பெண்மைக் குறிப்புகள் தோன்றியிருப்பதாக’ (ப.25) தெரிவித்தனர்.

கணவர் திருமணம் முடித்தபின் பால் மாற்றத்தால் பெண்மைத் தன்மை அடைந்து பெண்ணாக மாறியபின், இளம் வயதில் எவ்வித இன்பமும் அனுபவிக்காமல் செல்வி சாரதா தனிமையில் தள்ளப்பட்டாள்.

நினைவு முகம் மறக்கவில்லை என்னும் கதையில், ஜனகத்திற்கு பதிமூன்று வயதிலேயே திருமணம் முடித்து வைக்கப்படுகிறது. திருமணத்தின்போது அவர் முகத்தைக்கூட சரிவர அவள் பார்த்ததில்லை. ஒருமாதம் கழித்துதான் முழுமையாக அவர்முகத்தை ஜனகம் கண்டாள்.

மூன்று மாதம் கழித்து தீபாவளிக்கு ஊருக்கு வந்தவர், ‘திரும்பி போய் வருகிறேன்’ என்று கண்களால் சொல்லிவிட்டுப் போனவர்திரும்பி வரவேயில்லை

“அவள் பருவமடைந்தபோது அவர் இந்த உலகத்திலே இல்லை”

பெண்களை பருவமடைவதற்கு முன்பே, இளம் வயதில் திருமணம் செய்து வைக்கப்படுவதால், அவர்கள் இச்சமூகத்தில் பல பிரச்சனைகளை சந்திக்க நேருகிறது. சரியான வயதும், உடல் ஒத்துழைப்பும் இல்லாமையால் குழந்தையின்மையும் உண்டாகி அவர்கள் இந்த சமூகத்தால் இழிவுப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் (Ramiah, 2000). இளம்வயது திருமணத்தால், சிறு வயதிலேயே கணவனை இழந்து இளம் விதவையர்களாக இந்த சமூகத்தில் எந்த இன்பங்களையும் அனுபவிக்க முடியாமல் அனைவராலும் ஒதுக்கப்பட்டுத் தனிமைப்படுத்தும் நிலைக்கே தள்ளப்படுகிறார்கள்.

கைம்மை நிலைபோன்றே குழந்தைத் திருமணமும் பெண்களுக்கெதிரான கொடுமையாகும். குழந்தைத் திருமணம் என்பது பெண்கள் பூப்படையாமலே மணம் செய்துக் கொடுப்பது ஆகும். இதனால், பெண்களுக்கு உடல் அளவிலும், உள்ளத்தின் அளவிலும் பல பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர். பாவேந்தர்பாரதிதாசன் ‘கைம்மை’ என்னும் குழந்தைத் திருமணம் பற்றி தன்னுடைய ‘புதிய ஆத்திசூடி’யில் எடுத்துக்காட்டியுள்ளார்.

“பூப்பின் மணங்கொள்”

‘கைம்மை நிலைபோன்றே ‘குழந்தைத் திருமணம்’ என்னும் நிலையும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த காரணத்தினாலே பாவேந்தர் திருமணம் செய்துக்கொள்ள உரிய பருவமும், வயதும் வந்த பிறகு மணம் செய்துக்கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார் (Barathidasan, 2002). திருமணம் என்றால் என்ன? என்பதுகூட தெரியாத இளம் வயதிலேயே பெண் குழந்தைகள் திருமணம் என்னும் கூட்டுக்குள் அடைக்கப்பட்டு, அவர்கள் படும் துன்பங்களையும், இன்னல்களையும் கண்டு மனம் பொறுக்க முடியவில்லை என்று பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துக்காட்டியுள்ளார்.

## விதவையர் மறுமணம்

இந்துமத ஆண் உலகம் தங்களது பெண்ணுலகத்தின்மாட்டு பூண்டொழுகும் கொடுமைச் செயல்கள் பலவற்றில் இங்கு நாம் விதவைகளை பற்றி மட்டும் கவனிக்க வேண்டியுள்ளது.

உலக இன்பத்தை நுகர்ந்து அலுத்துப்போயிருக்கும் பழுத்த கிழவனாயினும், தன் மனைவியர் இறந்துவிட்டவுடன் மறுமணம் புரிய முயலுகிறான். அதுவும் வனப்பு மிகுந்த, எழில் பொருந்திய இளஞ் சகோதரிகளையே தன் மனத்திற்குத் தேர்ந்தெடுக்கிறான். ஆயின், ஒரு பெண்மகள் தன் கொழுநனை இழந்துவிட்டால் அவள் உலக இன்பத்தையே சுவைத்தறியாதளாயிருப்பினும் தன் ஆயுட் காலம் முற்றும் அந்தோ, தன் இயற்கைக் கட்புலனை இறுக மூடி, மனம் நொந்து, வருந்தி மடிய நிபந்தனை ஏற்பட்டு விடுகிறது. என்னே, அந்நியாயம்.

இதுபொழ்து நம் நாட்டில் விதவைகள் மறுமணம் செய்துகொள்ளலாகா தென்னும் வழக்கமிருப்பது பாரபட்சம் நிரம்பிய கொடுமையான செயலாகும். தன் மனைவியை இழந்த கிழவன் மறுமணம் செய்துகொள்ளலாமென்றும், தன் கணவனை இழந்த மகப்பேறு பெறாத இளமங்கை மறுமணம் செய்து கொள்ளலாகாதென்றும் கூறுவது நடுநிலைமை கொண்ட அறச் செயலாகாது.

விதவைகள் மறுமணம் செய்துகொள்ளும் வழக்கம் கற்புக்கு பங்கம் விளைவிப்பது ஆகும் எனக் கூறினால் அது பொருந்தாது. விதவைகள் மறுமணம் செய்விக்காதிருத்தலினாலேயே அவர்கள் கற்பழித்து மாய்கின்றனர். காமச்சுவை கருதும் இளம் கைம்பெண்கள் பதிற்றொழுக்கத்தில் வீழ்ந்து, அதனால் கருப்பந்தரித்து இரண்டோர்திங்களும் ‘சிசு ஹத்தி’ தோஷத்திற்கு உள்ளாகின்றார்கள். இப்பாவம் யாரைச் சாரும். விதவைகள் மறுமணம் செய்துகொள்ளல் ஆகாதென்று கட்டாயப்படுத்திவரும் பெற்றோர்களையே சாரும். மறுமணம் விரும்பாத பெண்களைத் தவிர்த்து, ஏனைய கைம் பெண்களுக்கு மறுமணம் செய்வித்தலே நன்று என்று 1926 குடியரசு இதழின் பெரியார் எடுத்துரைக்கிறார்.

உலகிலேயே மிகப்பெரிய சீர்த்திருத்தக்காரரான மகாத்மா காந்தியடிகள் இந்து விதவைகளைப் பற்றி, அநேக சந்தர்ப்பங்களில் பேசியும், எழுதியும் வந்திருக்கிறார். அவற்றுள் சென்ற ஆண்டு ‘நவஜீவன்’ பத்திரிக்கையில் மகாத்மா எழுதி இருக்கும் விஷயத்தைக் கவனித்தால், விதவைகளின் விடுதலை சம்பந்தமாய் மகாத்மா எவ்வளவு தூரம் உழைக்கிறார் என்பது புலனாகும் என்கிறார் பெரியார். அவை, ‘பால்ய விதவைகளைக் கட்டாயப்படுத்தி வைத்திருப்பது போன்று, இயற்கைக்கு விரோதமான பொருள் உலகில் வேறொன்றும் இல்லை என்பது எனது திடமான நம்பிக்கை என்று பெரியார் தன்னுடைய குடியரசு (1926) இதழில் மேற்கோள் காட்டுகிறார்.

1921 -ஆம் வருடத்திய ஜனசங்கியைப்படி இந்து கைம்பெண்களின் தொகையினை நோக்குகையில் அய்யகோ! என் நெஞ்சுத் துடிக்கிறது என்பதாக காந்தியடிகளின் கட்டுரை அமைகிறது.

விதவைகளின் கொடுமையை நீக்க ஒரு நூறு வருடங்களாக இராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர், கோலாம்பூர் மகாராஜா, சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய அறிஞர்கள் பாடுபட்டு உழைத்தனர். இதுபோழ்தும் இத்தகைய சீர்த்திருத்தத் துறையில் பாஞ்சாலத் தலைவர்கள் பலர்இறங்கி உழைத்து வருகின்றனர்.

இந்தியாவிலும், இந்து மதத்திலும்கூட அநேக சாதிகளில் விதவை மணம் அனுமதிக்கப்பட்டும் நடந்தும் வருகின்றது என்று 19.4.1935 -ல் காரைக்குடியில் நடைபெற்ற சொற்பொழிவில் விதவைகளின் மறுமணம் பற்றிப் பெரியார் பேசியுள்ளார்.

“விதவைத் திருமணம்” என்கிற சொல், நமது பெண்கள் விஷயத்தில்தான் சொல்லப்படுகிறதே தவிர, ஆண்கள் விஷயத்தில் சொல்லப்படுவதில்லை. எப்படி இந்த அம்மை ஒரு புருஷடனுடன் கூடி, அவர்காலமான பிறகு இன்னொரு புருஷனை மணந்து கொள்கிறார்களோ - அதுபோல ஆண்களும் பலர், ஒரு மனைவி தவிர இரண்டாவதாக வரிப்பதை ‘விதவைத் திருமணம்’ என்கிறார்களா? ‘விதவன் திருமணம்’ என்றுதானே போடவேண்டும்?

கணவனை இழந்த பெண்கள் அடைந்த துன்பங்களை எல்லாம் கண்டு உள்ளம் வருந்திய படைப்பாளர்கள் மக்களுக்கு அந்நிலையை உணர்த்தியதால், மறுமணம் செய்துவைக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது.

“கணவனை இழந்தவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று (1856) சட்டம் அனுமதி வழங்கியதால் விதவை பெண்களுக்கு மறுமண அனுமதி கிடைத்தது. விதவை மறுமண அனுமதி கிடைத்த முக்கால் நூற்றாண்டுக் காலத்திற்குப் பிறகும், மணிக்கொடிக் காலத்தில் அரிதாக, சென்னை போன்ற நகரங்களில் மட்டுமே ஆரியசமாஜங்களின் ஆதரவினால் ஒரு சில மறுமணங்கள் நடைபெற்றன” (Sentamil Selvi, 2006).

மரபு மீறுவது சமூகக் குற்றம் என்று மறுக்கும் மூத்த தலைமுறையின் முடிவான கருத்தை அடுத்த தலைமுறையைச் சேர்ந்த சகோதரன் உடைத்து ஒரு புதிய திருப்பம் உண்டாக்குகிறான்.

வாழ்வில் இல்லற இன்பத்தைச் சிறிதும் அடையாமல் அவலநிலைக்கு உட்பட்டு மறுமணம் செய்து வைக்கப்பட்டாலும் அந்த மறுமணத்தை உடனே ஏற்றுக்கொள்ள இயலாமல் தவிக்கின்ற பெண்ணின் மாறுபட்ட மனநிலை வெளிப்படுகிறது.

விதவை, கணவன் நினைவுகளுடன் வாழ்ந்தால் நல்ல பெயர் பெறுவாள், அதை மீறும் பெண்களுக்குச் சமுதாயத்தில் மதிப்பிருக்காது என்று மரபைப் போற்றுபவர்கள் கூறி வந்திருப்பதால், அவை அந்த பெண்ணின் மனத்தில் ஊறிக் கிடக்கிறது. அதனால், தனக்குத் துணை தேவை என்று மறுமணம் செய்துகொண்ட பிறகு, அவ்வாறு செய்தது தவறோ என்று எண்ணுகிறாள்.

விதவை பெண்கள் மீது காதல் கொண்ட இளைஞர்களும் மறுமணம் செய்து கொள்ளும் விழிப்புணர்வு பெற்றனர்.

கணவனை இழந்த இளம் பெண்கள் மறுமணம் செய்துகொள்ள வேண்டும் பாவேந்தர் பாரதிதாசனும் தன்னுடைய புதிய ஆத்திசூடியில் வலியுறுத்தியுள்ளார்.

“வாழாட்கு வாழ்வு சேர்”

‘வாழாள்’ என்னும் ஏதோ ஓர் காரணித்தினால் கணவனை இழந்து வாழாமல் இருக்கும் பெண் எனப் பொருள்படும் (Visvanathan, 1991).

அத்தகைய பெண்களை ஆண்கள் எவ்வித தயக்கமின்றி மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஓர் உயரிய கருத்து இங்கே பாவேந்தரால் பெண்களுக்கு ஆதரவாக வலியுறுத்தப்பட்டு உள்ளது.

மறுமணச் சிந்தனை விடுதலைக் காலக்கட்டத்திற்கு முன்பு இருந்தே இலக்கியங்களின் வழி வலியுறுத்தப்பட்டு வந்தது. பாரதியார், பாரதிதாசன், கவிமணி, பெரியார், அண்ணா, புதுமைப்பித்தன் ஆகியோர் தாம் படைத்த இலக்கியத்தின் வழி பெண்ணிய விடுதலைப் பற்றியும், பெண்ணிய மறுமணம் பற்றியும் வலியுறுத்தி வந்துள்ளனர். விடுதலைக்காலக் கட்டத்தில் வெளிவந்து விடுதலைச் சிந்தனைகளை மக்களுக்கு வெளிப்படுத்தி வந்த மணிக்கொடி இதழிலும் பெண்ணியச் சிந்தனைகள் பரவலாக எழுதப்பட்டு வந்தன. மணிக்கொடி எழுத்தாளரான பி. எஸ். ராமையாவும் தம் சிறுகதைகளில் பெண்ணியம் சார்ந்த பெண் விடுதலை, பெண்ணின் மறுமண சிந்தனையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

மலரும் மணமும் என்னும் சிறுகதையில், செல்லத்திற்கு ஏழு வயது இருக்கும்போதே திருமணம் செய்து வைக்கப்படுகிறது. திருமணம் பற்றியே அறியாத வயது. “அவள் ருதுவான (வயதடைந்த) போது அவள் கணவன் இறந்து, அவள் விதவையாகிறாள். பெண் என்ற அமைப்பில் அழகில் மேம்பட்டிருந்த ஒருபெண் விதவை அலக்கோலத்தில் தள்ளுவது ஏன் என்று, தன் தாய்மாமன் மகன் ராமதாஸ் அவளை மறுமணம் செய்துகொள்ள முடிவு எடுக்கிறான். விதவா விவாகா சங்கத்தின் மூலம் அவளை திருமணம் செய்துகொள்ள முடிவுச் செய்து, இந்த சமூகக் கட்டமைப்புகளை எல்லாம் மீறி ‘விதவையான செல்லத்தை’ மறுமணம் செய்துகொள்கிறான்” (Ramiah, 2000).

மற்றொருக் கதையான எனது மாஜிக் கணவர் என்னும் கதையில், சாராதவிற்கு மாப்பிள்ளை வீட்டாரின் கேட்டுதலுக்கிணங்க தேவையான வரதட்சனைக் கொடுத்து திருமணம்

செய்துவைக்கப்படுகிறது. திருமணத்திற்கு பிறகு, மாப்பிள்ளை பி.ஏ. இறுதி பரீட்சை எழுதியிருப்பதால் அதன் முடிவு வரும்வரை சாந்தி முகூர்த்தம் தள்ளி வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

பின் மூன்று மாதம் கழித்து சாரதாவின் தந்தைக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் மாப்பிள்ளை அசௌக்கியமாகப் படுத்திருப்பதாகவும், அவரை உடடினடியாக வரும்படியும் எழுதியிருந்தனர். அவருக்கு உடம்பெல்லாம் வலி அதிகமாக இருக்கிறது என்று மருத்துவர்கள் சில மருந்துக்களை தந்தனர். பின் வலி குறைய குறைய உடலில் சில மாற்றங்கள் நிகழ்ந்தது. அதாவது, அவர்ஆண் தன்மையிலிருந்து பெண் தன்மையாக பால் மாறியுள்ளார். இவை அனைவருக்கும் ஆச்சிரியமாக இருந்தது. கணவன் இருந்தும் விதவையான செல்வி சாரதாவிற்கு மறுமணம் செய்து வைக்க அவள் பாட்டியும் தந்தையும் யோசனை செய்தனர்.

இந்து சமயத்தில் ஒருதரம் மணம் செய்தவர்கள், மறுபடியும் மறுமணம் செய்ய முடியாது என்ற சில கட்டுப்பாடுகள் வகுத்துள்ளனர். இதனைக் கட்டுடைக்கும் விதமாக செல்வி சாரதாவிற்கு மறுமணம் செய்து வைக்க சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

நினைவு முகம் மறக்கவில்லை எனும் மற்றொரு கதையில், ஜனகத்திற்கு பதிமூன்று வயதில் திருமணம் செய்துவைக்கப்படுகிறது. திருமணம் ஆன சிறிது நாளிலே, தீபாவளிக்கு வீட்டிற்கு வந்து சென்ற கணவன் இறந்த செய்தியே வந்து சேர்ந்தது.

அதற்கு பின் ஜனகம் தன் சகோதரர்மகாதேவய்யர்வீட்டில் இருந்தால். மகாதேவய்யர்ஒரே நிறுவனத்தில் பணிபுரியும் சேதுராமனும் இவரும் நல்ல நண்பர். இலக்கிய வாசிப்பில் அதிகம் ஆர்வம் உடையவர். வாசித்த இலக்கியத்தைப் பற்றி இருவரும் உரையாடிக் கொள்வது உண்டு.

விடுமுறை நாட்களில் இருவரும் கலந்துரையாடுவது உண்டு. அப்போது, ஒருநாள் சேதுராமன் மகாதேவய்யர்வீட்டிற்கு சென்றார். அங்கு எதிர்பாராத விதமாக ஜனகத்தைச் சந்திருக்கிறார். இருவரும் பார்வையும் சந்திக்கின்றன. அவை பின்னாலில் காதலாக மலருகிறது.

சேதுராமன் மகாதேவய்யரிடம் ஜனகத்தைத் திருமணம் செய்துகொள்ள விருப்பம் தெரிவிக்கிறான். திருமணத்திற்கு பிறகு பெண்கள் மறுமணம் செய்து கொள்ள இந்த சமூகத்தில் கூடாது என்று சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். இதனை மகாதேவய்யர் அவருடைய வீட்டாருக்குத் தெரிவிக்க, அவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரித்தனர். அதையெல்லாம் பொருட்படுத்தாது மகாதேவய்யர் ஜனகத்திற்கு மறுமணம் செய்ய ஏற்பாடுகள் செய்தார். இந்துத்துவக் கட்டமைப்பையும் மீறி ஜனகத்திற்கும், சேதுராமனுக்கும் திருமணம் செய்யப்பட்டது (Ramiah, 2000).

விதவையர்க்கு மறுமணம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் பாத்திரமாக சேதுராமன் படைக்கப்பட்டிருக்கிறார். சமூகச் சிந்தனையுள்ள பாத்திரங்களாக சேதுராமனையும், மகாதேவய்யரையும் ஆசிரியர் படைத்துக்காட்டியிருக்கிறார்.

## விதவையர் அவல நிலை

பெண்கள் அடைகின்ற விதவைத் துயரம் நீண்ட காலமாக இலக்கியங்களில் பேசப்பட்டு வருவதாகயிருந்தாலும் இன்னும் தீரவில்லை என்பது கண்கூடான ஒன்று.

குழந்தைத் திருமணம் இளம் விதவைகள் அதிகரிப்பதற்கு வித்திட்டது. மிகப் பழமையான காலத்திலிருந்தே விதவைக்குச் சமூகத்தில் மதிப்பில்லாத நிலை இருந்து வருகிறது. அதனால், அவளுடைய தலைமுடியும் பிறந்ததிலிருந்து அணிந்து வருகின்ற பூவும், பொட்டும், இடையில் வந்து இணைந்த கணவன் அணிவித்த தாலியோடு தொடர்புடையதாக்கப்பட்டு அவனிறந்த பிறகு பறிக்கப்படுகின்றன. உணவு, உடை, பழக்க வழக்கங்களிலும் இப்படிதான் இருக்க வேண்டும் என்று ஒடுக்கப்படுகிறாள்.

"மனைவி இறந்தவுடன் தன் தனிமையைப் போக்கிக் கொள்ள இரண்டாவது திருமணம் செய்துகொள்ளும் தந்தை, பதினான்கு வயதில் விதவையான தன் மகளுக்கு மறுமணம் செய்து வைக்கவில்லை. இது ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் கொண்ட முரண்பட்ட சமுதாய அமைப்பினைக் காட்டுகிறது" (Anaimuthu, 2009).

மதம், பெண்ணின் சமூகத் தகுதி நிலையில் வேறுபாட்டைக் கற்பித்துள்ளது. இந்து மதத்தின் ஆதிகத்தை உடைத்தெறியும் பணியை மணிக்கொடி சிறுகதைகள் கவனம் செலுத்தியுள்ளன.

"இளம் விதவையாக இருந்த பொழுது கு.ப. சேது அம்மாள் எழுதிய சிறுகதையில் விதவை மறுமணத்திற்குச் சமுதாயம் ஆதரவு தரவேண்டும் என்று அழுத்தமாக எடுத்துரைக்கிறார். இந்த எழுத்தாளரின் அனுபவங்கள் இச்சிறுகதையின் முதல் பாதியில் அவரையறியாமலே இடம் பெற்றிருக்கின்றன. இவர், இளம் விதவையாகயிருந்து சமுதாயத்தில் தாம் நேரில் அனுபவித்த அனுபவங்களையும் தாம் அடைந்த உணர்வுகளையும் புரிந்துக் கொண்டு அவற்றைப் படைப்பில் எழுதிக்காட்டி விழிப்புணர்வூட்டியுள்ளார்" (Anaimuthu, 2009). சமுதாயத்திற்குப் புத்துணர்ச்சியூட்டிய இவர், பிற்காலத்தில் மறுமணம் செய்துகொண்டு பிறருக்கும் வழிகாட்டியுள்ளார் என்பதை இங்குக் குறிக்க வேண்டும்.

இளம் வயதிலே விதவைக் கோலம் பூண்டு பல பெண்கள் இந்த சமூகத்தால் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

மலரும் மணமும் என்னும் சிறுகதையில், செல்லம் இளம் வயதிலே திருமணம் செய்யப்பட்டது. திருமணமான ஆறு மாதத்திலே அவள் விதவையாக்கப்பட்டாள். விதவையான செல்லம் வீட்டில் முடங்கிக் கிடக்க வேண்டும் என்றும், அவள் யாருடனும் வெளியில் போவதோ வருவதோ கூடாது என்று அவர்களின் அனைத்து ஆசைகளையும் முடக்குகின்றனர்.

விதவையான செல்லம் எதிர்ப்பாராத விதமாக, "அன்று லட்சுமணய்யர்ஏதோ வேலையாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அதையறியாத செல்லம் தற்செயலாக எதிரே வந்துவிடவே அவர்நிரம்பவும் கோபத்துடன் "சனியன், எங்கேயாவது மூலையில் போய்க் கிடப்பதற்கென்ன கொள்ளை? வயாசகல்லே கடா மாடாட்டமா? ராமதாஸ்கிட்ட இன்னம் என்ன விளையாட்டு? துக்குறியாட்டமா எதிரில் வருகிறது" என்று உரத்துத் திட்டுவிட்டு வீட்டிற்கு திரும்பிப்போய் உட்கார்ந்து கொண்டார்". (Ramiah, 2000).

விதவையர் எதிரே வந்தால் எந்தக் காரியமும் நடக்காது என்ற முட்டாள் தனமான நம்பிக்கைகள் சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளனர். பிறப்பில் எல்லோரும் சமம் என்று உடல் உயிர்உள்ள ஜீவிகளாய் இருக்க, இதில் ஆண், பெண் என்ற வேறுப்பாட்டில் முதலில் வேறுப்படுத்தப்பட்டு, பின் பெண்களை மட்டும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்குகின்றனர்.

திருமணமான பின் மனைவியை இழந்தால் ஆணாகப்பட்டவன் விதவன் இல்லை. கணவன் இழந்தால் மட்டும் பெண் விதவை என்று அவளை இந்த சமூகம் அடுக்குமுறைப்படுத்தி, அவளின் சுதந்திரத்தை முற்றிலுமாக பறித்துவிடுகிறது.

இந்த ஆண் சமூகம் விதவைப் பெண்களைத் ஒடுக்கப்பட்டவர்களாகவே கருதுகின்றனர். தன் விருப்பத்திற்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

வளையல் துண்டு என்னும் சிறுகதையில், செண்பகம் சிறு வயதிலே கணவனை இழந்து புனேவில் தன் சகோதரர்வீட்டில் தங்கியிருந்தார். அங்கு பக்கத்து வீட்டில் பரமசிவம்பிள்ளை தங்கியிருந்தார். நல்ல அழகான உடலமைப்பைக் கொண்ட அந்த பெண்மணி, தினமும் குளித்துவிட்டு தலையை துவட்டிக் கொண்டிருப்பதை தினமும் கவனிப்பது உண்டு. அவளோடு பேசிப் பழகி, பழக்கம் காதலாய் மாறியது. அவள் விதவை என்பதை அறிந்த பின்பும், பழக்கம் தொடர்ந்தது. பரமசிவம்பிள்ளை ஊருக்கு சென்றவர்மனைவியோடு திரும்பி வந்தது அந்த பெண்ணுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அவன் அந்த விதவைப் பெண்ணை தன் ஆசைக்கு இணைக்கிக் கொண்டான். "ஒருநாள் அந்த விதவைப் பெண் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். அவள் வந்த சமயம் என் மனைவி பின்புறத்தில்

குளித்துக் கொண்டிருந்தாள். அந்த சமயத்தின் நிலைமை என்னை முட்டாளாக்கிவிட்டது. அந்தப் பெண்ணுடன் சரஸமாட ஆரம்பித்தேன். "என்னவென்றாலும் அவள் பெண்ணல்லவா? ஆகையால் அவள் என்னுடன் பேசக்கூட மாட்டேன் என்று மௌனம் சாதித்தாள். கடைசியாக நான் அவள் கையைப் பலவந்தமாக அணைக்க இழுத்தேன்" எனும் கருத்து, பெண் இந்த ஆண் சமூகத்தால் எளிமையான முறையில் ஏமாற்றப்படுகிறாள் என்பதையும் இளம்வயதிலே விதவையான பெண்கள் எளிதில் ஏமாற்றப்பட்டு ஆண்களின் மோகப் பொருளாக இன்பத்திற்கு ஆட்படுத்தப்பட்டு, கடைசியில் புறம்தள்ளப்படுகிறாள் என்பதை உணர்த்துகிறது (Ramiah, 2000).

## முடிவுரை

பெண் விடுதலையும், பெண்ணியக் கருத்தாடல்களையும் முன்வைத்தவர்களாகப் பார்க்கப்பட்ட பாரதி, பாரதிதாசன், பெரியார், கவிமணி; அவர்களுக்குபின் வந்த புதுமைப்பித்தன், வ.ரா. ஆகியோர் நாட்டு விடுதலையோடு பெண்ணிய விடுதலையும் தன் எழுத்துகளின் மூலம் வெளிக்காட்டி வந்தனர். சிறுகதைக்கென ஒரு இதழை உருவாக்கிய பெருமை மணிக்கொடி பி. எஸ். ராமையாவிற்கே சேரும். அந்த மணிக்கொடி இதழ்களில் பல சிறுகதைகள் எழுதப்பட்டு வந்தன. அவைகளில் பெரும்பான்மை பெண்ணிய விடுதலையும், பெண்ணியச் சிந்தனையும் கொண்ட கதைகளாகவே எழுதப்பட்டன. பெண்ணிய விடுதலைகளான குழந்தை மணம் (இளம் வயது திருமணம்), விதவையர் மறுமணம் முதலான முற்போக்குச் சிந்தனைகளை முன்வைத்து எழுதி வந்தனர். பெரியார் வலியுறுத்தும் இந்த சிந்தனையை பிற்காலத்தவரும் தன் படைப்புகளில் வெளிப்படுத்தி பெண் விடுதலைக்கும், பெண் முன்னேற்றத்திற்கும் அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர். மணிக்கொடி எழுத்தாளராக பி. எஸ். ராமையா தன்னுடைய கதைகளின் மூலம் இளம் வயது பெண்ணுக்கு திருமணம் செய்யப்படுவதால், அவள் சிறு வயதிலே விதவையாகும் நிலையையும், சிறு வயது விதவையானாலும் அந்த பெண் மறுமணம் செய்துகொள்ள உரிமையற்றவாக இந்த சமூகம் சில கட்டுப்பாடுகளை கட்டமைக்கப்பட்டுள்ளதால், விதவையான பெண் படும் துயரங்களையும் எடுத்துக்காட்டி; விதவை மறுமணம் செய்துகொள்ளும் புரட்சியையும், புரட்சி செய்யும் பாத்திரங்களையும் படைத்துக் காட்டி, இந்துத்துவக் கட்டமைப்பை உடைத்தெறிகிறார். பி. எஸ். ராமையா சமூகப் போராளியாகவும், பெண் விடுதலையை முன்வைக்கும் முற்போக்குச் சிந்தனையாளராகவும் மட்டுமின்றி தேசிய விடுதலைப் போராட்டவாதியாகவும் இருந்து, தன் வாழ்வை இந்த சமூகத்திற்காக அர்ப்பணித்துள்ளார் என்பதை இக்கட்டுரை மூலம் வெளிப்படுத்தும் கருத்து ஆகும்.

## References

Anaimuthu, V., (1974) Thoughts of E.V.R. Periyar, PEVR-Nagammai Education and Research Trust, Chennai, India

Anaimuthu, V., (2009) Thoughts of E.V.R. Periyar, PEVR-Nagammai Education and Research Trust, Chennai, India

Barathidasan, (2002) Barathidasan Kavithaigal, Mullai Nilaiyam, Chennai, India

Panjangam, K., (2019) Tamil Sirukadhaikalum Manithap Peruveliyum (Thiranaivu katturaikal), Chennai, India

Ramiah, B.S., (1980) Manikkodi kaalam, 1st Ed, Meiyappan Publication, Chidambaram, India

Ramiah, B.S., (2000) Malarum Manamum, Allaiyens Company, Chennai, India

Ramiah, B.S., (2004) Manikkodi Kaalam, 2nd Ed, Meiyappan Publication, Chidambaram, India

Sentamil Selvi, T., (2001) Manikkodi Kavithaikalil makalir 1st ed, Kudiyarasi Publication, Chennai, India

Sentamil Selvi, T., (2006) Manikkodi Kavithaikalil makalir, 2nd ed, Kudiyarasi Publication, Chennai, India

Visvanathan, S., (1991) Bharathiyar Kavithaikal, (First Edition – 1991) Model House Lan, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License